உ
சிவமயம்

REGISTERED AS A
NEWS PAPER IN
CEYLON
P. M. G. No. H. A.
19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணி மாதம்
28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

புத ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ௵ மாசி ௴ ருஉ (1948 பிப்ரவரி 17 செவ்வாய்க்கிழமை) [இல அசு

## பெரியாரைத் துணைக்கோள்

(தமிழ்ப் பண்டிதர், வ. மு. இரத்தினேஸ்வர ஐயர்)

இவ்வாக்கியம் ஒளவையெம் அன்னையின் அமுதமொழியென்பது நந் தமிழுலகம் அறிந்ததே. இனிப் பெரியார் என்பவர் யார்? அவரையேன் துணையாகக்கொள்ளவேண்டும். துணைகொண்டு நலம் பெற்றார் யாவர்— அவரை வெறுத்துத் துயர் உற்றார் யாவர் என்பதே இக் கட்டுரையின் முடிபாம். பெரியாரென்பதன் பொருள் செயற்கரிய செய்வார் பெரியார் என்றார் பெருநாவலர். ஆயின் மிக்கோர் அரியசெயலேயாம் நேயமிக்க மனத்தை நிறுத்தல்காண் என்றனர் சிவப்பிரகாசர். அறிவென்னுந் திண்ணிய தோட்டியால்—பொறிகளாகிய யானைகளைத் தத்தம் புலன்மேல் ஒழுங்கின்றிச் செல்லாமற் காப்பவர். மனத்தை இறைவன் திருவடியிற் செலுத்தி உயிராவணமிருந்துஉற்றுநோக்கி உள்ளக்கிழியின் உருவெழுதி—உவந்திருப்பவருமாவர். கடவுளின் திருவருள் விளக்கம் உலகின்கண் நிகழ்ந்தாலும் ஆணவ மலத்தால் மறைப்புண்டு அறியாமையிலுழலும் மக்கள் கடவுளையும் அவர் திருவருளையும் அறியார்கள். அறிந்தாலன்றி இம்மைமறுமை வீடு முதலிய பயனையும் அடையார்கள். கடவுளின் திருவருள் தங்களிடம் பதியப்பெற்றபெரியோர்களே அவ்வருளை அறிவார்கள். அத்தகைய பெரியோர்கள் மக்களுக்கு அறிவித்தாலன்றி அவர்கள் அவ்வருளையும் ஆண்டவனையும் அறியமாட்டார்கள். ஆகையால் இருமையும் வெறுத்துத் துறவறம் பூண்டு அவ்வறநெறி நின்று தாம்பெற்ற இன்பம்பெறுக இவ்வையகம் என்று அறமுதற் பொருள்களை உற்றவாறு உலகிற்குணர்த்தி அறிவிப்பவராவர். இன்னுங் காலத்தால் சிலர் கல்வியால் அறிவால் அன்பால் ஒழுக்கத்தால் மூத்தவருமாவர்.

அறத்தின் நுட்பம் நூலானன்றி உய்த்துணர்வாகிய அனுபவத்தானும் அறிந்தவர். வருங்கால நிகழ்ச்சிகளை ஐயமறக் காணும் மெய்யறிவுடையவர்கள். மழையானது பயிரை வளம் பெறச் செய்தல்போல் இவர்கள் உயிரை உரம்பெறச் செய்பவர்கள் ஆதலால்,

நீத்தாரைப்போற்றதூஉம்நீத்தாரைப்
[போற்றாஉம்
நேத்திரமெனன உவகை நிறிநீஇ
மூத்த அறிவினல் நூற்பொருள் மூன்
[காட்டி
ஆத்தனையுங் காட்டி விடலால்
என்றனர் ஆன்றோர்.
அறனறிந்து மூத்த அறிவுடையார்
[கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.
என்பது பொதுமறை.
எத்திறமும் வயர்கோன் நட்பாமா
[றெண்ணினரே
சுத்தநெறி ஆரூரர் சோமேசா—வைத்த
அறியவற்றுளெல்லாம் அரிதே பெரி
பேணித் தமராக் கொளல். [யாரைப்
என்றனர் சிவஞான முனிவர்.

பெரியவர்கள் உள்ளம் உவக்க நடந்து அவர்களைத் தமக்குச் சிறந்த துணையாகக் கொள்ளுதல் அரிய பேறெவற்றினும் அரியதாகும்.

வயர்கோன் கலிக்காம நாயனாரைச் சுந்தரமூர்த்திசுவாமிகள் துணைக்கொண்டதும், சுந்தரரைச் சிவபெருமான் துணைகொண்டதும் சான்றாகும்.

ஒருவனுக்குப் பொருள் வன்மை, கல்விவன்மை, குடிவன்மை, படைவன்மை, அரண்வன்மை, உடல் வன்மை, மதிவன்மை முதலாகப் பலவன்மைகளினும்:

தம்மிற்பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை—
என்றனர் செந்நாப் போதார்.

சூரியவொளியானது கண்படல் முற்றவர்க்கு பயன்படவில்லை. அதை யறிந்த வைத்தியன் மருத்துவ நூற்படி சிகிச்சைசெய்து படலத்தை நீக்கிக் காட்டினாற் காண்கின்றனர்.

அதுபோல ஆணவமலத்தால்மறைப்புண்டு ஞானக் கண்ணிழந்து அறியாமையிலுழலும் மக்களது மூதன் மலவலியை மேலே சொன்ன பெரியோர்கள் தங்கள் திருநோக்கத்தாலும் அத்தமத்தகசை யோகத்தாலும் அஞ்செழுத் துபதேசத்தாலும் மறைத்துள்ள மலப்படலத்தைப் போக்கித் திருவருள் ஒளியை ஞானக்கண்ணிற்கு காட்டுவார்கள். ஆகையால் அத்தகைய பெரியாரைத் துணைக்கொள என்றனர் முற்றுணர்ந்த மூதாட்டி ஒளவையெம் மன்னையென்றுணரவும்.

இனி அப்பெரியாரைத் துணைகொண்டு நலமுற்றவரைக்கூறுவோம் தசரத மன்னன் பெரியவராகிய வசிட்டர் துணையால் ஸ்ரீராமன் முதலியபுத்திரப்பேறெய்தினன் விசுவாமித்திரரைத் துணைகொண்டு ஸ்ரீராமனும் மந்திரக் கணைகள், சீதை திருமணம்முதலிய நலத்தைப் பெற்றான். கண்ணபிரான் துணையால் பாண்டவர்கள் பல நலத்தைப் பெற்றனர். பிருகு முனிவர் முற்கலைமுனிவர் இவர்கள் துணையால் சோமகாந்தனுந் தக்கனுங்குட்டநோய் நீங்கினர்.

இனிப் பெரியாரை அவமதித்துக் கெடுதியுற்றவரைக் கூறி முடித்துக் கொள்வோம்.

எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம்
[உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகுவார்.
என்பது உத்தரவேதம்.

கபில முனிவரிடம் பிழைபட்டு சகரர் அறுபதினாயிரம் பேர்கள் சாம்பலாயினர்.

மூளும் வெஞ்சினத் தருந்தவன்
முனிந்தெரி விழிப்ப
பூளை சூடிதன் நகையினில்
எயில்பொடித் தனபோல்
ஆளு மைந்தர் ஆறறுபதருஞ்
சாம்பரா யவிந்தார்
வேள்வி கொண்டநல் வேந்தனுக்
குரைத்தன வேய்கள்,
என்பது பாகவதம்,

தண்டி யடிகளிரு
தாளிணைபே ணுதொழிந்தார்
[illegible]
[illegible]

பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

பசுக்களேகொன்று தின்றுபாவிகள் பாவமொன்றறியார்
உசிர்க்கோலைபல நேர்ந்துநாடோறுங் கூறைகொள்ளுமிடம்
முசுக்கள்போற்பல வேடர்வாழ்முருகன பூண்டிமாநகர்வாய்
இசுக்கழியப் பயிக்கங்கொண்டுநீர் எத்துங்கிங்கிருந்தீ ரெம்பிரானிரே.

—சுந்தரர்

திருச்சிற்றம்பலம்

## இன்பதுன்பங்கள்

(சே வெ ஜம்புலிங்கப்பிள்ளை)

இவ்வுலகில் இன்ப துன்பங்கள் மாறி மாறி உண்டாகும் என்பதைப் பின்வரும் கந்தபுராணச் செய்யுளால் அறியலாம்.

"ஆக்கமும் வறுமைதானு
மல்லலு மகிழ்வுமெல்லா
நீக்கமி லுயிர்கட்கென்று
நிலையெனக் கொள்ளற்பாற்றோ
மேக்குயர் கடவுட்டிங்கள்
வெண்ணிலாக் கதிர்க்கற்றை
போக்கொடு வரவுநாளு முறை
முறை பொருந்திற்றன்றே"

மேற் செய்யுளின் கூற்றை வலியுறுத்தியன இப்போது இந்திய தேசத்தில் உண்டான நிகழ்ச்சிகள். சில மாதங்களுக்கு முன்னே இந்தியநாடு சுதந்திரநாளைக் கொண்டாடியது. இப்போது காந்திமகானின் பிரிவால் பெரிதும் வருந்துகின்றது. அப்பெரியாரின் அருங்குணங்களை உலகமே போற்றுகின்றது. இவர் தேசாபிமானம், பாஷாபிமானம், சமயாபிமானம் ஆகிய மூன்றபிமானங்களும் ஒருங்கே அமையப்பெற்றவர் பரந்தநோக்குடைய தேசத்தொண்டர். தாய்ப் பாஷையை ஒவ்வொருவரும் போற்றவேண்டுவது கடமையென போதிப்பவர். ஒருவர்க்கொருவர் பேசும்போதும் கடிதம் எழுதும்போதும் அந்தந்த ஊரில் வழங்கும் தாய்ப் பாஷையையே உபயோகிக்கவேண்டுமென்னும் கொள்கையையுடையவர். அதன்படியே தாம் நடப்பவர். தம்மைச் சேர்ந்தவர்களையும் அங்ஙனம் நடாத்துவிப்பவர். விரதானுஷ்டானத்திலும், தெய்வவழிபாட்டிலும் பிரியமுடையவர். ஆசிரியலோடு கடவுட்பக்தியையும் இணைத்துப் பிறருக்கு வழிகாட்டியவர். சோமவாரவிரதம் அனுஷ்டிப்பவர். சமயப் பொறையுடையவர்.

"எவ்வெவர் தம்மையேனும் யாவரே
யெனினும் போற்றின்
அவ்வவரிடமாக் கொண்டே
அவர்க்கருள் தருவரப்போற்றி"

என்னும் உண்மையை உணர்ந்தவர். சாதிமத பேதமின்றி எல்லா இந்தியர்களையும் ஒன்றுசேர்க்க வேண்டுமென்னும் ஆசையை உடையவர். பிற உயிர்களுக்கு மறந்தும் தீங்கு நினையாதவர்.

"கறுத்தின்னா செய்தவக்கண்ணு
மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார்கோள்"

என்னுந் திருக்குறளுக்கு உதாரணமாய் இருந்தவர்.

தமது உடல் பொருள் ஆவி முதலியவற்றை தேசத்தொண்டிற்கே அர்ப்பணஞ்செய்த தியாகமூர்த்தி. சிறிதும் தந்நலங்கருதாதவர் பெருந்துறவு பூண்டவர். அகிம்சா தர்மத்தைப் பிறருக்குப் போதித்தலோடு தாம் அதனை முற்றும் அனுசரித்தவர் உலகம் போற்றும் இத்தகைய அனந்தகுண சீலரை

'தொழுதகை யுள்ளும்
படையொடுங்கு மொன்னார்
அழுத கண்ணீரு மனைத்து"

என்றபடி ஓர் வன்னெஞ்சன் இவரை வணங்குவதாகப் பாசாங்குசெய்து கரந்து கொன்றான். இவ்வஞ்சகன் செய்கை மெய்ப்பொருள் நாயனாரைக் கொன்ற முத்திநாதனுடைய தீயகருமத்தோடு ஒத்திருக்கின்றது.

"நெருநலுள னொருவனின்றில்லை
யென்னும்
பெருமையுடைத் திவ்வுலகு"

"வந்துமா மறலியென துயிருண்
பான் பயிலையுண் சிரலிமிற்கின்றான்
முந்திநீ யெனையானந்த வாரிதியின்
மூழ்குறவிடுத்தருள்புரியாய்"

வெஞ்சமனஞ்சவேலொடெறிந்தான்
நமரங்காள்
அஞ்சலெனுஞ் சொல்யார் சொல
வல்லார் நமரங்காள்
மஞ்சிவரிஞ்சி மன்றமிறைஞ்சீர்
நமரங்காள்
நஞ்சமயின்றார் நல்குவர் மாதோ
நமரங்காள்

என்னும் ஆன்றோர் வாக்குக்களைச் சிந்தித்து நிலைமையை உணர்வோமாக.

ஆழ்க தீயதெல்லாம் அரன்
நாமமே சூழ்க
வையகமுந் துயர் தீர்கவே.

சிறியா ருணர்ச்சியு
ளில்லைப் பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

என்றார் சிவஞான முனிவர்.

தண்டி யடிகளாகிய பெரியாரின் பெருமையை யுணராது திங்கிழைத்து கண்ணிழந்து துன்புற்றனர் புறமதத்தார். இதனால் இகலொடும் செற்றம் நீங்கிய மனத்தாராகிய பெரியார் துணையால் நலம் பெற்றவரையும், இகழ்ந்து கெடுதியுற்றவரையும் அறிந்தோம். ஆதலால் பெரியாரைப் பிழையாமல் துணைகொண்டு நலம் பெறும்படிக் கூறி இக்கட்டுரையை முடித்துக் கொள்வோம்.

— தொண்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஸு
மாசி மீ ருஃ செவ்வாய்க்கிழமை

## யாழ்ப்பாணத்திற்கு நேர்ந்த இழுக்கு

இலங்கையிலே யுள்ள பல பகுப்பு மக்களுட் சிங்களரும் தமிழருமே ஏனைய பகுப்பு மக்களைக் காட்டிலும் தொகையிற் கூடியவர்களென்பதும், தொன்மையானவர்களென்பதும் மறுக்கொணா உண்மையாகும். இலங்கை அந்நியர் கைப்பட்டுப்பரிபாலிக்கப்படுதற்கு முந்தி, இந்த இருசாதி மக்களின் மூதாதைகள் இலங்கையைப் பரிபாலித்து வந்தார்களென்பது சரித்திரம். இலங்கையி லுள்ள கீழ்மாகாணம் வடமாகாணமென்னு மிரு மாகாணங்களும் பெரும்பாலும் தமிழ்மக்களின் வாசஸ்தானங்களெனினும், இவ் வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணமே இலங்கையெங்குமுள்ள தமிழ் மக்களுக்குத் தலைநகராகக் கொள்ளப்படுவதாகும். கொழும்பு நகர் இலங்கை முழுவதற்கும் இப்பொழுதுள்ள தலைநகராகும். அநுராதபுரம் கண்டி என்னும் இரு நகரங்களையும் முற்காலத்திலே சிங்கள தமிழ் அரசர்கள் இராசதானியாகக் கொண்டு பரிபாலனஞ் செய்து வந்தனரேனும், இக்காலத்திலே சிங்கள சாதியார் அந்த இரு நகரங்களையும் சிங்கள அரசருடைய பழைய தலைநகரங்களென்றே சொல்லுகிறார்கள்; பொலநறுவையையும் இவற்றோடு அடக்கி விடலாம். ஆனால், நல்லை நகரைத் தன்னகத்தே கொண்ட யாழ்ப்பாணப் பட்டினமே அக்காலத்தில் தமிழரசருக்கு இராசதானியாக விளங்கியமையினால், யாழ்ப்பாணம் எக்காலத்திலும் தமிழர்களுடைய பழைய தலைப் பட்டினமாக மதிக்கப்படுகிறது.

எதற்காக இந்தப் பழைய கதைகளையெல்லாம் எடுத்துக் காட்டுகிறோமென்றாற் சொல்லுதும். எங்கள் அரசரின் பிரதிநிதியாக, அவருடைய தம்பியாரும் பாரியாரும் சென்ற வாரம் இந்த இலங்கைக்கு விஜயஞ் செய்தமையும், வந்தநோக்கமும், அரச தம்பதிகளுக்குக் கொழும்பு கண்டி அநுராதபுரம் முதலாம் பிரதான பட்டினங்களிற் செய்யப்பட்ட உபசாரங்களும் இன்னபிறவும்எவருமறிந்த விஷயமாம்;மேலுமவர்கள்பொலனறுவை புத்தளம் நீர்கொழும்பு முதலிய இடங்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள மக்களுக்குக் காட்சி கொடுத்து அவ்வவ் மக்களால் உபசரிக்கப்பெற்று மீண்டுள்ளார்கள்.இங்ஙனமெல்லாமிருப்ப அரச தம்பதிகள் தமிழ் மக்களின் பிரதான பழைய பட்டினமாகிய யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ் செய்யப்படாமைக்குக் காரணமென்ன வென்பதுதான் ஆசங்கைக்கிடமாகும்.

அரச தம்பதிகளை யாழ்ப்பாணத்திற்கும் விஜயஞ் செய்ய வேண்டுமென்று முந்தியே அங்கும் இங்கும் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பின், அவர்கள் இங்கு விஜயஞ் செய்வதும், இவர்கள் அவர்களை ஏற்பதும் இனிது நடைபெற்றிருக்கும்;

இந்த வடமாகாணத்திலும் அரச தம்பதிகள் விஜயஞ் செய்து பார்க்கத்தக்க ஒல்லாந்தக்கோட்டை முதலிய புராதன அமைப்புக்களும் கீரிமலை போன்ற நன்னீரூற்றுக்களும் இன்னபிற விசேடங்களுமுள்ளன; யாழ்ப்பாணக் குடாநாட்டின் இயற்கையமைப்பே இலங்கையின் ஏனைய பாகங்களின் அமைப்போடு ஒத்துப் பார்க்குமிடத்துச் சிறிது பேதமான தோற்றத்திற் காணப்படுவதாகும்; இங்ஙனமிருத்தலால் யாழ்ப்பாணமும் விசேஷமாகத் தரிசித்தற்காகிய வூராகும்.

ஆனால், இப்பொழுதுள்ள தமிழ்ப் பிரதிநிதிகள் தமிழர் பெருமையையும் தமிழ் மூதாதையர் செய்த அருஞ் செயல்களையும் ஈட்டிய மதிப்பையும் மக்கள் உள்ளபடி உணர்ந்திருந்தால், இலங்கைக்கு வந்து போன இராசதம்பதிகளை யாழ்ப்பாணத்திற்கும் வரச் செய்து அவர்கள் இங்குள்ளாரைக்கண்டு மகிழவும் இவர்கள் அவர்களை உபசரித்து மதிப்புறவுஞ் செய்திருப்பார்கள். இவ்விஷயத்திலே எங்கள் தமிழ்ப் பிரதிநிதிகள் பராமுகமாயிருந்தமை, அவர்களைப் பிரதிநிதிகளாக அனுப்பிய மக்கள் வருந்துதற் கேதுவானதம். இடதுசாரிக் கட்சியினர் போல், சுதந்திர அந்தஸ்துக் கொண்டாட்டத்திலும், அரச தம்பதிகள் வரவுக் கொண்டாட்டத்திலும் இத்தமிழ்ப் பிரதிநிதிகளும் பங்குபற்றாதிருந்தால், இங்குள்ள தமிழ்மக்கள் இவர்களைக் குறைகூறுதற்கு இடமில்லையாம்; சுவதந்திரக் கொண்டாட்டத்திலும் அரச தம்பதிகள் விஜயக்கொண்டாட்டங்களிலும் எங்கள் தமிழ்ப் பிரதிநிதிகள் அத்தனைபேரும் கலந்து பங்குபற்றிக்கொண்டு, தங்கள் நாட்டிற்கு அத் தம்பதிகளை வரச் செய்தலின்றி, இத்தமிழ் நாட்டையும் பழைய தமிழ் இராசதானியையும் புறக்கணித்தமை சாலவும் இரங்கற்பாலதாகும். இச்செயல் இவ்வியாழ்ப்பாணத்திற்கு ஓர்இழுக்காயதென வருந்துகின்றோம்.

---

## 40,000 ரூபா களவு

சென்ற சனிக்கிழமை, கொழும்புக் குதிரைப்பந்தயச் சங்கத்தின் காரியாலயத்தில் இருந்து 40,000 ரூபாவைச் சில கள்வர் அபகரித்துவிட்டார்கள் என்று தெரிகிறது; சனிக்கிழமை பிரவு மேற்படி சங்கத்துக் காரியாலயத்திலே, சங்க உத்தியோகத்தர் ஒருவர் பணத்தைச் சரிபார்க்கும் போது, கள்வர் தோன்றி, மிளகாய்ப் பொடியை அவருடைய கண்களில் தூவிவிட்டுப் பணம் அவ்வளவையும் பறித்துக்கொண்டு ஓடிவிட்டனர்; பொலிசார் [illegible] றனர்.

# இடிமுழங்குகிறது

## "தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இந்தஜெகத்தினை அழித்திடுவோம்"

...... மணி ......

**நாட்டிற் பஞ்சம், பசி, பட்டினி, நோய், வேலையின்மை பரவி வருகிறது. லட்சக் கணக்கானோர் "கஞ்சி வரதப்பா என்றால், எங்கே வரதப்பா' என்று அங்கலாய்க்க, ஒருசிலர் மாடமாளிகைகளில் வசித்து, விலாப்புடைக்க அறுசுவை யுண்டியருந்தி, பஞ்சணை மெத்தையில் துயில்கின்றனர்; இந்த அநியாய முறையை அகற்றி, எல்லோரும் இன்புற்று வாழ இலங்கை பாராளுமன்றமும் அதன் நிர்வாகத்தை மேற்கொண்டுள்ள மிஸ்ரர் சேனநாயக்காவும் கருமமாற்றப் போகின்றனரா? அல்லது "தனி ஒருவனுக் குணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்' என்ற பாரதியின் இடிமுழக்கத்துக்கு ஆளாகப்போகின்றனரா என்று கட்டுரையாளர் வினவுகிறார்.**

இதுவரை சாதாரண மனிதன் ஒருவன் இருக்கிறானென்றோ, அந்தமனிதப் பிறவியெடுத்த அவனது வாழ்க்கை நிலையை உயர்த்த வேண்டுமென்றோ இந்த இலங்கை அரசியல்வாதிகளுக்குக் கனவிலும் எண்ணம் இருந்திருக்காது. ஆனால் சர்வஜன வாக்குரிமை அமுலுக்கு வந்தபின், இந்த சாதாரண மனிதன் இலங்கையரசியல் வாதிகளின் அகராதியில் ஓர் முக்கிய ஸ்தானத்தைப்பெற்றுவிட்டான்.தேர்தற் காலத்திலே, சாதாரண மனிதன் வாழ்க்கை நிலையை உயர்த்தவே துடியாய்த் துடிக்கிறோம் என்று பலபடப் பேசி ஓரளவுக்கு அமோகப் பதவிகளில் அமர்ந்ததும, இந்த அரசியல் வாதிகள இந்தச் சாதாரண மனிதனைப்பற்றிச் சிந்திப்பதில்லை. ஆனால் இப்போது சிலகாலமாக "சாதாரண மனித"னுக்கு ஓர் யோகம் கிளம்பியிருக்கிறது என்றே சொல்லவேண்டியிருக்கிறது. தன்னலத் தியாகி, தனக்கென வாழாப் பிறர்க்கென வாழும் பெற்றியாளன், தியாகமூர்த்தி பண்டிதர் ஜவஹர்லால் நேரு சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதத்திலே இந்தியா சுதந்திரமடைந்த தினத்திலே, இந்திய சுயராஜ்யம் பணக்காரர்க்கல்ல முதலாளிமார்க்கல்ல, ஆனால் சாதாரண மனிதனுக்குத்தான். அவனின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காகத்தான் என்று மனப்பூர்வமாக, அந்தரங்க சுத்தியுடன் பேசினார். அதே "சாதாரண மனிதன்" சுபீட்சத்தையே எங்கள் பிரதமர் சேனநாயக்காவும் அவருடைய சகா பண்டாரநாயக்கா மந்திரியாரும் எங்கள் சுதந்திர விழாப் பேச்சிலும குறிப்பிட்டார்கள.

சர்க்கரை என்றவுடன் நாக்கில் இனிப்புத் தட்டிவிடாது என்பதனை திரு. சேனநாயக்காவுக்கும் இன்று அதிகாரம் வகிக்கும் மேதாவிகளுக்கும் தெரிவிக்க விரும்புகிறேன். 16 வருஷ காலமாக இந்த இலங்கையின் பொருளாதாரத்தைப் பங்கப்படுத்தி உண்ணும் கால் நாழி அரிசிக்கும், நான்கு முழத் துண்டுக்கும் அந்நிய நாட்டை எதிர்பார்க்கவைத்த அந்தப் புண்ணிய புருஷர்கள்தான் இன்றும் அதிகார பதவிகளில் இருக்கிறார்கள் என்பதை "சாதாரணமனிதன்" மறக்கவில்லை. இலங்கையின் வருமானத்தில் ஏறக்குறைய 100-க்கு 80 விகிதமானதைத் தமக்கும் தம் பரிவாரங்களுக்கும் சம்பளம என்றும்,பஞ்சப் படியென்றும், பிரயாணச்செலவென்றும் விநியோகம் செய்யும் இவர்களா 'சாதாரணமனித'னின்வாழ்க்கைநிலையை உயர்த்தப்போகிறார்கள்?

அடி நாக்கில் நஞ்சும், நுனி நாக்கில் தேனும கொண்டுள்ள மனப்பான்மை இனியும் வேண்டியதில்லை.இதனால் பொதுஜனங்கள் ஏமாந்தகாலம் போய்விட்டது. அக்காலம் இனிஒருபோதும் மீளப்போவதில்லை. பொதுஜனங்கள், சாதாரண மனிதர் விழித்துவிட்டனர். திரு.சேனநாயக்காவின் சுதந்திரக் கொண்டாட்டத்துக்கு மாறாக இடதுசாரிகள் நடாத்திய

தொடர்ச்சி 5 ம் பக்கம்

## முதல்வன் இனி யாரோ?

"யாழ்ப்பாணன்"

எச்சாதி எச்சமயம் எத்தேசத் தாரும்
இன்றுலகில் முதல்வன்யார் என்னக் கேட்டால்
உச்சமாய்க் காந்திதான் என்று கூறும்
ஒப்பற்ற பெருமையினைப் பாரதந் தாங்கக்
கச்சைதான் பேருடையாய் அரையிற் கட்டிக்
காசினியைக் கருணையினல் ஆண்டு வந்தாய்
நச்சேகொள் உளமுடையான் நமனாய் வந்து
நாயகாவுன் ஆருயிரைக் கவர்ந்தா னந்தோ!

இனியுலகில் முதல்வன்யார் என்னும் போழ்து
யாருளரோ யாமுந்தான் காணோ மையா
பனிவரைசேர் பாரதத்தின் துயரந் தானும்
பல்லாண்டு சென்றாலும் தீருமோ தான்
கனவினிலும் உனையேயாம் மறக்கோ மையா
கண்ணீரும் ஒருபோழ்தும் தீரா தையா
உனதுயிரை நமனேதான் கவர்ந்த போதும்
உலகுவரை உன்சோதி ஓங்குந் தானே.

சத்தியத்துக் கரிச்சந்திரன் ஒருவன் தானே
தரணிதனில் பொறுமைக்குத் தருமன் தானே
உத்தமநற் கருணையினல் உலகை வென்றோன்
உயர்புத்த னின்றுமோ ரொருத்தன் தானே
நித்தியமுஞ் சத்துருவில் பரிவு காட்டி
நிமலனெனும நிலையடைந்தோன் யேசு தானே
இத்தினம்நீ உலகினிலே உதித்த தாலே
[illegible] இருவரென இயம்பப் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செனனயக்கா ஆட்சி பிழைக்க வழி

## மந்திரசபையை மாற்றி அமைக்க

### தமிழ் மக்களுக்கு அரசியலிற் பங்கு

...... ஸ்ரீதரன் ......

திரு சேனனுபக்கா இந்த இலங்கையில் உண்மையான, ஸ்திரமான ஜனநாயக அரசியலை நிறுவவேண்டுமானால், மந்திரசபையில் தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதிகளைச் சேர்க்கவேண்டும் என்று கட்டுரையாளர் அபிப்பிராயப்படுகிறார். இனியும் திரு சேனனுயக்கா தமது அரசியல் பரிபாலனத்திற்குக் கட்சிப்பற்றற்ற சுயேச்சை வாதிகளை நம்பியிருப்பாரேயானுல் ருஷியச் சமதர்மம் என்னும் சூருவளியில் அகப்பட்டுத் தத்தளிக்க வேண்டி நேரிடுமென்று "ஸ்ரீதரன்" எச்சரிக்கை செய்கிறார்.

**1948**-ம் ஆண்டு பிப்ரவரிமாதம் 4ம் திகதியுடன் இலங்கைபுதிய சகாப்தம் ஒன்றை எய்தியுள்ளது. மூன்று நூற்றாண்டுகளுக்குமேல் அடிமைக் குழியிற் கிடந்த இலங்கை இன்று சுதந்தர நிலையையடைந்து மற்றும் நாடுகளுடன் சம அந்தஸ்தில் நிற்கும் நிலையை எய்தியிருக்கிறது. இலங்கை யடைந்திருப்பது உண்மைச் சுதந்திரமல்ல என்று கூறுவாருமுளர். ஆனால், மக்களது வாழ்க்கைநிலையையுயர்த்தி வறுமை, பிணி என்பவற்றிலிருந்து அவர்களை விடுதலையாக்கி, அவர்களுக்கிடையே சமத்துவமும், சுதந்திரமும், சகோதரத்துவமும் அளிக்க உதவுதலே சுயராச்சியம் என்றால், இலங்கை, இப்போது வழங்கப்பட்டுள்ள அரசியல்மாற்றத்தினால் அத்தகைய சுயராச்சியத்தை அடைந்திருக்கிறது என்றே கூறவேண்டும். இந்த இலங்கையில் வாழும் மக்களின் வாழ்க்கை நிலையை அவர்களின் பண்பாட்டுக்கமைய மாற்றியமைக்க, 150 ஆண்டு காலத்தின் பின் இப்போது முதன்முதலாகச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது. இச்சந்தர்ப்பத்தை நாட்டின் தலைவர்கள் பயன்படுத்தப்போகின்றனரா? அல்லது வெள்ளைக்காரர் ஆட்சியிலிருந்த அதே ஊழல்களை, அதே குறைகளை இனியும் தொடர்ந்து அநுட்டிக்கப்போகின்றனரா? என்பது இன்னும் சில நாட்களில் தெளிவாகத் தெரியவரும். ஆனால் திரு. செனனுயக்கா அதிகாரத்திலிருக்குமவரை பழைய மாமூல் பிரகாரமே சகல விஷயங்களும் நடக்குமன்றி, புரட்சிகரமான மாற்றங்கள் நிகழமாட்டா என்று விஷயமறிந்தவர்கள் பேசிக்கொள்வதில் உண்மையில்லாமலில்லை. இந்த இலங்கைக்குத் திரு. செனனுயக்கா அரசியல் சுதந்திரம் பெற்றுக்கொடுப்பதில் செய்த சேவையை எவரும் மறப்பதற்கில்லை. ஆனால் அவர் அதிகார பதவிக்கு வந்த காலம் தொடக்கமாக இந்நாட்டின் பொருளாதார நிலைமை மிகவும் கீழ்நோக்கி வந்திருக்கிறது என்பதை அவரே ஒத்துக்கொள்ள வேண்டும். வெள்ளைக்காரர் எந்த ஆட்சி முறையைக் கைக்கொண்டனரோ, அதில் அணுவேனும் பிசகாது திரு. செனனுபக்கா தம் ஆட்சியைச் செய்துவந்திருக்கிறார். பரிபாலன முறையில் மாத்திரம் அவர் ஆங்கிலரைக் 'காபி'யடிப்பதோடு நின்றுவிடவில்லை. அவர்களுடைய பிரித்தாளும் தந்திரத்தையும் அவர் அப்படியே பின்பற்றி அமுல் நடத்திவருகிறார். பிரிட்டிஷார் தம் அடிமை நாடுகளிலுள்ள சாகியத்தார்க்கிடையே பிரிவினையையுண்டாக்கி அதன்மூலமாகத் தம் அதிகாரத்தை நிலைநிறுத்தினர். இலங்கையில் திரு. செனனுயக்கா தமிழ் மக்களுக்கிடையே பிரிவினையை உண்டாக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

○

சுதந்திர விழாவின்போது அரசாங்கம் லட்சக் கணக்கிற் செலவுசெய்து ஆடம்பரமாக விளம்பரப்படுத்தி, மக்களை அக்கொண்டாட்டத்திற் பங்குபற்றச் செய்தது. ஆனால் எவ்விதமான பணச் செலவுமின்றி படாடோப விளம்பரமுமின்றி இச்சுதந்திரத்தை எதிர்க்க இடதுசாரிகள் கூட்டிய கொழும்புக் கூட்டத்தில் 35,000 பேர் சமுகமளித்தனர் என்று அறிகிறோம். இந்த ஓர் விஷயம் திரு. செனனுயக்காவின் கண்களை விழிக்கச் செய்யவேண்டும். தம்மீது பொதுஜனங்களிடையே ஓர்வித வெறுப்புத் தோன்றி உருவாகி வருகிறதென்பதையும், அந்த வெறுப்பை அகற்றுவதற்குத் தக்க உபாயங்களை இன்னே கைக்கொள்ளாவிட்டால் கூடிய சீக்கிரம் பதவி இழக்கவேண்டி ஏற்படும் என்பதனையும் திரு செனனுயக்கா உணரவேண்டும். இடதுசாரிகளின் தொகை இன்று பாராளுமன்றத்தில் குறைவாக இருந்தபோதிலும் நாளடைவில் அவர்களுடைய பலம் அதிகரிக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்? டொனமூர் அரசியலில் இரண்டே இரண்டு இடதுசாரிகள் அரசாங்க சபையிலிருந்தனர்; இன்று அவர்கள் தொகை 25க்கு மேற்பட்டிருக்கிறது, இந்த இடதுசாரிகள் தமக்குள்ளே பரஸ்பரம் வேற்றுமை கொண்டுள்ளபோதிலும், திரு செனனுயக்காவின் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் விஷயத்தில் ஒற்றுமையடைவார்கள் என்பதை திரு செனனுயக்காவே மறுக்கமுடியாது. இடதுசாரிகளின் தாக்குதலைத் தவிர்ப்பதற்காகவும், தம் பதவியைப் பாதுகாப்பதற்காகவும் திரு, செனனுயக்கா தமக்கிருக்கிற அதிகாரத்தாலும் செல்வாக்காலும் சுயேச்சை வாதிகளைத் தற்காலிகமாகத் தம் பக்கத்தில் வைத்திருக்கலாம். ஆனால் இந்தச் செப்படிவித்தை அநேகநாட்களுக்கு இருக்கமுடியாது, அரசியற் குற்றவாளிகளுக்கு மன்னிப்பு அளிக்கவேண்டும் என்ற பிரேரணை பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு வந்தபோது, திரு. செனனுயக்காவின் விருப்பத்திற்கு மாறாக அது வெற்றியடைந்தது, திரு செனனுயக்காவின் கண்ணைத் திறந்திருக்க வேண்டும். செனனுயக்காவின அரசாங்கத்தை நோக்கி ஓர் பெரும் சூருவளிக்காற்று வரவிருக்கிறது. அதிலிருந்து தப்பவேண்டுமானுல், திரு. செனனுயக்கா இன்னே தம் அரசியற் கொள்கையை மாற்றியமைக்கவேண்டும்.

○

முதலாவதாக திரு செனனுயக்காதமது பிரித்தாளும் கொள்கைக்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். தமது மந்திர சபையிலே தமிழ்மக்களும் இடம்பெற்றிருக்கின்றனர் என்பதைத் தம்பட்டமடிப்பதற்காக, திரு. சுந்தரலிங்கத்தையும், திரு சிற்றம்பலத்தையும் திரு. செனனுயக்கா சேர்த்திருக்கிறார். இவர்களிருவரும் கெட்டிக்காரர், திறமைசாலிகள் என்பதில் ஐயமில்லை; இவர்கள் சிறந்த அரசியல்வாதிகளாயுமிருக்கலாம். ஆனால் இவர்கள் தமிழ் மக்களனைவரதும் நம்பிக்கையைப் பெற்றவர்களல்லர் இந்த இரண்டுபேரும் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பாக நின்று தேர்தலில் வெற்றிபெற்றால் அவர்களை மந்திரசபையிற் சேர்க்க ஓர் காரணமிருக்கலாம் ஆனால் இவர்களிருவரும் திரு. செனனுயக்காவின் ஐக்கிய தேசியக் கட்சியையும், அவரது தலைமை ஸ்தானத்தையும் தாக்கி அதன்பயனாக மக்களின் வாக்குரிமையைப் பெற்றவராவர். என்று இவர்கள் தாம் வாக்காளர்க்குக் கொடுத்த உறுதிமொழிகளைப் புறக்கணித்துத் தம் எண்ணப்படி தம் கொள்கையை மாற்றினரோ அன்றே அவர்கள் தம் பிரதிநிதித்துவத் தன்மையை இழந்துவிட்டனர்; எனவே அவர்களைத் தமிழ்ப் பிரதிநிதிகள் என்ற நியதியில் மந்திரசபையில் நியமிக்க ஜனநாயகம் இடங்கொடுக்காது. திரு. செனனுயக்கா, இப்போதும் சரி, தமது அரசாங்கத்தைப் பலப்படுத்த வேண்டுமானால், இந்த நாட்டிலேயுள்ள இரு பிரதான சாகியத்தாராகிய சிங்களர்—தமிழர்களிடையே பூரண ஐக்கியத்தை ஏற்படுத்த விரும்புவாரேயானுல், தமிழ்மக்களின் நம்பிக்கையைப் பெற்ற பிரதிநிதிகளைத் தம் மந்திரசபையிற் சேர்க்கவேண்டும்; தமிழ்க்காங்கிரசின் போக்குப் பிழையானதாய் இருக்கலாம்: அதன் தலைவர்கள் திரு. செனனுயக்காவுக்கு வேண்டாதவர்களாயிருக்க

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## வீரராக முன்னேறுவோம்

### அஸ்தி சமர்ப்பணத்தின் பின் பண்டித நேருவின் முழக்கம்



மகாத்மா காந்தியடிகளின் அஸ்தி அலகபாத்திலே கங்கை, யமுனை, சரஸ்வதி நதிகளின் சங்கமத்திற் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், அங்குக் கூடியிருந்த லட்சக்கணக்கான மக்களுக்கு இந்தியப் பிரதமர் பண்டிதர் ஜவஹர்லால் ஓர் செய்தி விடுத்தார். அச்செய்தியில் அவர் கூறியதாவது:

"மகாத்மாவின் பூவுலக யாத்திரை முடிந்துவிட்டது. அவர் அமரராகிவிட்டார். ஆனால் இந்தியராகிய எங்கள் யாத்திரை இப்போதுதான் ஆரம்பமாகியிருக்கிறது.

"எங்கள் அடிகள், இறந்தும் இறவாமலிருக்கும் புண்ணிய மூர்த்தியின் போதனைகள் என்னும் வெளிச்சம் இதோ எம்மைச் சூழ்ந்திருக்கிறது. அந்தப் பிரபை வாய்ந்த வெளிச்சத்தைக்கொண்டு அதன் உதவியைக்கொண்டு நாம் முன்னேறுவோம்

"எங்கள் தந்தை — பாரத சமுதாயத்தின் தந்தை — எமக்களித்துவிட்டுப் போன அரும் பெரும் பொக்கிஷமான போதனைகளின்படி நடக்க எங்களுக்குச் சக்தியுண்டு என்பதை நிரூபித்துக் காட்டுவோம். ஜெய் ஹிந்த்"

## ஆங்கில - அமெரிக்க நாடகம்

### ஐ. தே. ஸ்தாபனத்தில் காஸ்மீரப் பிரச்சினை

காஸ்மீரச் சமஸ்தானம் விஷயமாகப் பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா ஐக்கியதேச ஸ்தாபனத்துப் பாதுகாப்புச்சபையிலே ஓர் முறைப்பாட்டைச் சமர்ப்பித்தது ஆனால் முறைப்பாட்டுக்காரனையே, எதிரியாக்க அச்சபை முயற்சிக்கும் திருவிளையாடலை, சென்னை ஹிந்துப்பத்திரிகையின் நிருபர் இக்கட்டுரைமூலம் எடுத்துரைக்கிறார், பழைய சர்வதேச சங்கத்தை ஓர் 'கொள்ளைக்கூட்டத்தினர் குழு" என்றார் வீரன் சுபாஷ் சந்திரபோஸ்; இந்த ஐக்கியதேச ஸ்தாபனமும் அந்த நிலைமையை எய்தமாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? ஹிந்துப்பத்திரிகை நிருபர் பின்வருமாறு கூறுகிறார்:

காஸ்மீரம் இந்தியாவுடன் சேர்ந்துள்ள ஓர் ஸ்தானம்: அதற்கு விரோதமாக மலைஜாதியினர் படையெடுத்து வருகிறார்கள். அப்படை எடுப்புக்குப் பாகிஸ்தான் உதவிபுரிகிறது. இப்படியாக உதவி புரியக்கூடாது என்பதே இந்தியாவின் முறைப்பாடு. ஆனால் முறைப்பாட்டை ஓர் பக்கமாக வைத்துவிட்டு அதனோடு சம்பந்தப்படாத பிரச்னைகளில் பாதுகாப்புச் சபை ஈடுபட்டிருக்கிறது.

முதலாவது காஸ்மீரத்திலே நடுநிலைமையான பொதுஜனவாக்கெடுப்பு; இரண்டாவது இந்தியா, பாகிஸ்தான், காஸ்மீர மன்னர் இந்த மூன்று சாராருமற்ற ஓர் அரசியலைக் காஸ்மீரத்தில் இடைக்காலத்துக்கு ஏற்படுத்துவது; மூன்றாவது, காஸ்மீரத்தில் உள்ள படைகளை அப்புறப்படுத்துவது என்னும் மூன்று விஷயங்களையும் பற்றிச் சிந்தித்து ஓர் முடிவு காண்பதிலேயே, இதுவரை பாதுகாப்புச்சபை தன் சக்தியைச் செலவழித்திருக்கிறது. இந்த மூன்று விஷயங்களையும் செய்யச் சொல்லியே பாகிஸ்தான் கோரியது. ஆனால் முறைப்பாடு கொடுத்த இந்தியாவின் கோரிக்கையை-அதாவது பாகிஸ்தான் ஐக்கியதேச ஸ்தாபனத்தில் அங்கத்துவம் வகித்துக்கொண்டு இன்னோர் அங்கத்துவ தேசமான இந்தியாவுக்கு விரோதமாக அரசியல் நடைவடிக்கை எடுக்கலாமா? மலைஜாதியினர்க்கு உதவிபுரியலாமா? என்னும் கேள்விகள்-இதுவரை வேண்டிய அளவு ஆலோசிக்கப்படவில்லை. முறைப்பாட்டுக்கட்சியின் முறைப்பாட்டை ஓர் பக்கத்தில் வைத்துவிட்டு வேறு விஷயங்களில் பாதுகாப்புச்சபை தன கவனத்தைச் செலுத்தும் விகடநாடகம் இன்று நடக்கின்றது.

காஸ்மீரத்திலே—அந்தச் சமஸ்தானம் இந்தியாவுடன்சேருவதா அல்லது பாகிஸ்தானுடன் சேருவதா என்பதுபற்றி ஓர் பொதுஜன வாக்கெடுப்பு நிகழ்த்தவேண்டுமென்றும், அந்த வாக்கெடுப்பை ஐக்கியதேசஸ்தாபனமே நடத்தவேண்டுமென்றும் பாகிஸ்தான் கேட்கிறது. காஸ்மீரமக்களின் அநுதாபத்தையும் ஆதரவையும் பெற்று இப்போது அங்கே பிரதம மந்திரியாகவிருந்து அரசியலை நிர்வகிக்கும் ஷேயிக் அப்துல்லாவை நீக்கவேண்டுமாம்; காஸ்மீரத்தில் உள்ள இந்திய ராணுவத்தை அப்புறப்படுத்தவேண்டும், அல்லது பாகிஸ்தான் ராணுவமும் அங்கே போக இடங்கொடுக்கவேண்டும். பாகிஸ்தான் கோரிக்கைகள் இவையே

காஸ்மீரத்திற் பொதுஜன வாக்கெடுப்பு நடத்தத்தயார்: ஆனால் அந்தவாக்கெடுப்பை பொறுப்புநடத்தும் காஷ்மீர அரசாங்கத்துக்கேயன்றி மற்றவர்களுக்கல்ல, ஐக்கியதேச ஸ்தாபனம் தானும் அங்கே அரசியற் பொறுப்பை மேற்கொள்ளவிடமுடியாது: ஆனால் அந்த வாக்கெடுப்பை எவ்வாறு செய்யவேண்டும் என்ற ஆலோசனைகளைச் சொல்லிததரலாம், இதற்கு மிஞ்சி அங்கே அதிகாரம் வகிக்க ஐக்கியதேச ஸ்தாபனத்துக்கு உரிமையில்லை என்று இந்தியா கூறுகிறது. காஸ்மீர மக்களின் சுதந்திரத்தில் எவரேனும் கைவைக்கமுடியாது. இப்போது அவசியகாலத்துக்கென ஷேயிக் அப்துல்லா பிரதமராக ஓர் பரிபாலனம் நடக்கிறது இன்னும் சிலகாலத்தில் அவர் ஓர் பொதுத்தேர்தலை வைத்து அதன்மூலமாக ஓர் அரசாங்கம் ஸ்திரமாக ஏற்படும். அத்தேர்தலில் காஸ்மீரமக்களின் உண்மையான அபிப்பிராயம் இன்னதென்பது தெளிவாகிவிடும் என்றும் இந்தியா வாதிக்கிறது. ராணுவத்தைச் சமஸ்தானத்திலிருந்து அப்புறப்படுத்துவது பற்றி இந்தியா கூறுவது இதுதான்:-

காஸ்மீரச் சமஸ்தானத்தின்மீது படையெடுத்தவர்களில் கடைசி ஆள் கலைக்கப்படும்வரை, இந்திய ராணுவம் அங்கே நிச்சயமாகவே யிருக்கும், அந்நியர் வெளியேறியபின், நிகழும் பொதுஜன வாக்கெடுப்பில் காஸ்மீரம் பாகிஸ்தானுடனேயே சேரும் என்று தீர்க்கப்பட்டால், இந்திய ராணுவம் அங்கே அதன்பின் ஒரு நிமிஷமேனும் நிற்கமாட்டாது. ஆனால்

தொடர்ச்சி 4 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கில - அமெரிக்க நாடகம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவுடன்தான் காஸ்மீரம் சேருவது என்பது உறுதியானல், அச்சமஸ்தானமக்களின் பூரண சம்மதத்துடன் இந்திய ராணுவம் அங்கே இருக்கும்.

இந்தியாவின் இந்தக் கூற்றுக்குப் பாதுகாப்புச்சபை செவிசாய்த்ததாகத் தெரியவில்லை.

காஸ்மீரத்திலே மலைஜாதியினர் படை எடுத்தபடியாலேயே போர் நடக்கிறது. அதனை நிறுத்தவேண்டும் என்று இந்தியா கேட்டது. போர் நிறுத்தம், அவ்வளவு அவசரமில்லை; ஆனல் காஸ்மீரத்தில் அரசியல் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதுதான் அதிக அவசியமான பிரச்சினை என்று பாதுகாப்புச்சபை கருதி, எப்படியாவது அச்சமஸ்தானத்திலே தனது வாலை நீட்ட முயற்சிசெய்கிறது.

பாதுகாப்புச்சபையில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த நாடுகள் அமெரிக்காவும் இங்கிலாந்துந்தான். இந்த இரண்டுநாடுகளும் எதைச் சொல்லுகின்றனவோ, அதன்படி நடக்கத்தான், பாதுகாப்புச் சபையில் உள்ள சிறியநாடுகள் இருக்கின்றன.

பாதுகாப்புச்சபையில் பிரிட்டனின் கொள்கை என்ன? இந்தியாவை அடிமைப்படுத்தியிருந்த காலத்தில், காங்கிரசுக்கும் முஸ்லிம்லீக்குக்கும் பிணக்கு உண்டாக்கி எப்படி வேடிக்கைபார்த்ததோ, அதே திருவிளையாடலை, இப்போது, இந்தியாவைவிட்டு வெளியேறிய பின் சர்வதேச அரங்கத்தில் நிகழ்த்தி, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கு மிடையே பிணக்குண்டாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. ஆனல் ஒன்றும் தெரியாத பூனை இதுவும் குடிக்குமோ பாலை என்றுங்கு மிகவும் நுண்ணியதாகத் தன் நாடகத்தை அது நடித்துவருகிறது. பிரிட்டனும் அமெரிக்காவும் சர்வதேச அரங்கத்தில் அதிகாரமும் செல்வாக்கும் பெற்றுள்ளவரை, இந்தியாவுக்கு விரோதமாகவே, அத்தேச மன்றம் இருக்கும் என்பதற்குச் சந்தேகம்வேண்டியதில்லை.

பாதுகாப்புச்சபையில் நிகழ்ந்த விவாதங்களை அவதானிப்போர்க்கு ஓர் விஷயம் தெள்ளிதிற் புலப்படும். பாகிஸ்தான் பிரதிநிதியான சேர் ஸபாருல்லாக்கானுக்கு அதிகம்வேலை யிருக்கவில்லை. ஏன்? அவருடைய அபிப்பிராயங்களை பிரிட்டிஷ் பிரதிநிதிகளும், அமெரிக்கப் பிரதிநிதிகளும் பிரதிபலித்துக் கூறினபடியால் அவருடைய வேலை சுலபமாய்விட்டது.

ஆனல் அர்ஷ்டவசமாக, இந்தியா ஷை சபைக்குத் தன் சிறந்த புதல்வர்களில் ஒருவரை அனுப்பிவைத்தது. பாகிஸ்தானும் ஆங்கில அமெரிக்கக் கோஷ்டியும் எத்தனையோ பொறிக்கிடங்குகளை வைத்தனர். உள்ளமுருகத்தக்கதாக அவர்கள் பேசினர். இந்த மாய்மால வார்த்தைகளுக்கு அகப்படாமல், பொறிக்கிடங்கில் வீழாமல் இந்தியாவைப் பாதுகாத்த பெருமை, இந்தியாவின் பிரதிநிதி ஸ்ரீ கோபாலஸ்வாமி ஐயங்காருக் குரியது ஸ்ரீ ஐயங்காரும் அவருடைய சகாக்களும் இப்போது, இந்திய அரசாங்கத்தின் ஆலோசனையையும் கட்டளையையும் பெற இந்தியாவுக்கு மீண்டுவிட்டனர்

இதுவரை ருஷியா இவ்விஷயத்தில் தீவிரமாகப் பங்குபற்றவில்லை. ஆனல் அதன் அநுதாபம் முழுவதும் இந்தியாவின்பக்கம் என்பது ஓர் பகிரங்க இரகசியம். பாதுகாப்புச்சபை இவ்விஷயமாக ஓர் தீர்மானம் எடுத்தாலும் காலத்தில், அத்தீர்மானத்தைச் செல்லுபடியாக்காமல் தடுக்க ருஷியாவுக்கு ஓர் அதிகாரம் உண்டு ஆனல் ஐரோப்பாவிலே, பல அரசியற் சுமைகளைத் தாங்கியுள்ள ருஷியா, காஸ்மீரம் விஷயத்தில்தலையிட்டுதன்சுமையை அதிகரிக்கச் செய்யுமா என்பது ஓர் பெரிய கேள்வி.

பாதுகாப்புச்சபையில் நிகழ்ந்த விவாதத்தில் பல வேடிக்கைகளும் நிகழ்ந்தன. மகாத்மாகாந்தியை எத்தனையோதரம் சிறைவைத்து அவரை வருத்திய பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரதிநிதி, அன்றைய விவாதத்தில், இந்தியா காந்திஜியைப் பின்பற்றிச் சமாதானத்தை நிலைநாட்டவேண்டுமென்றார். இரண்டு உலக மகாயுத்தங்களில் ஈடுபட்டு கோடிக்கணக்கான மக்களைப் பலியிடச்செய்த பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரதிநிதி, பண்டிதர் நேருவுக்கு அன்று சமாதான உபதேசம் செய்தார்! இ[illegible] என்ன?

## காந்தீயமே கதியளிக்கும்

### வெள்ளவத்தைமக்கள் உறுதி

"இந்த நூற்றாண்டில் கண்கண்ட தெய்வம் காந்தி. அந்தக் கண்கண்ட தெய்வமாகிய காந்தி சந்நிதானத்திலே, அந்த மகானின் புனிதமான கொள்கைகளை மனப்பூர்வமாகப் பின்பற்றுவோம் என நாங்கள் பிரதிக்ஞை எடுத்துக்கொள்ளுகிறோம்'' இவ்வாறு சென்ற வியாழக்கிழமை வெள்ளவத்தை விநாயகராலயத்தில் காந்தியடிகளுக்காக நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் தலைமைவகித்த திரு. க. கனகரத்தினம் (பாராளுமன்றத்தில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி) உணர்ச்சி ததும்பக் கூறினர்.

மேற்படி கூட்டத்தில் கீழ்க்கண்ட இரு தீர்மானங்கள் நிறைவேறின.

1 பகைமையும் பலாத்காரமும் தாண்டவமாடும் இவ்வுலகிற்கு காந்தீயத்தைத் தவிர வேறுவிமோசனம் இல்லை. எனவே காந்தி பக்தர்களாகிய நாங்கள் இன்று தொட்டு, சமூக அரசியல், ஆத்மார்த்த துறைகள் யாவற்றிலும் காந்திஜி காட்டிய வழியைக் கடைப்பிடிக்கவும் சாதனமாகக் கொள்ளவும் இயன்றவரையில் முயலுவோம்.

2 காந்தீயதீபநெறிகளை உலகினிடத்தில் திகழச்செய்ய காந்திஜிக்குப் பிறகு அவருடைய ஞானப் புதல்வன் பண்டித நேருவினுல்தான் கிடைக்கும். எனவே துக்கத்தில் ஆழ்ந்துள்ள நேருஜியை காந்தீய தெய்வீக வீரம் கைதூக்கி விடவேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம். அதனுடன் நேருஜீ மூலம் மகாத்மாவின் மறைவினல் வியாகூலப்படும் இந்திய மகா ஜனங்களுக்கு எங்களது அநுதாபத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## செனநாயக்கா ஆட்சி பிழைக்க வழி

3ம் பக்கத் தொடர்ச்சி

லாம். ஆனல் இவ்விஷயம் திரு. செனநாயக்காவின் சொந்த வீட்டு விஷயமல்ல, தமது விருப்பையும் வெறுப்பையும் காட்டுதற்கு. இந்த நாட்டின் முன்னேற்றத்துக்கு உழைத்தவர்கள்தமிழர்; இன்றைய சுதந்திரத்துக்கு விதை போட்டவர்கள் தமிழர் என்பதை திரு. செனநாயக்கா மறந்துவிடக்கூடாது. இந்நாட்டுப் பரிபாலனத்தில அவர்களுக்கு — அவர்கள் நம்பிக்கை வைத்துத தெரிந்தனுப்பிய பிரதிநிதிகள் மூலமாகப்—பங்கு கொடுத்தலே நீதி. வரப்போகும் நெருக்கடியான காலத்தைச் சமாளிப்பதற்குத் தமிழ் மக்களின் துணையும் ஒத்துழைப்பும் திரு. செனநாயக்காவுக்கு இன்றியமையாது வேண்டியன. நாஸ்திகம் பேசி, பௌத்த தர்மத்துக்கும் ஹிந்து சமயத்துக்கும் முழு விரோதியாயுள்ள ருஷியச் சமதர்மப் பேயின் அட்டகசத்தைத் தடுக்கவேண்டுமானல் திரு செனநாயக்கா தமிழ்க் காங்கிரசின் ஒத்துழைப்பை நாடவேண்டும்.

○

திரு. செனநாயக்கா கூடிய சீக்கிரம் தமது மந்திரசபையை மாற்றியமைப்பார் என்றும், அதில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு ஜீ. ஜீ பொன்னம்பலம இடம் பெறுவார் என்றும் லண்டன் டைம்ஸ் பத்திரிகையின் கொழும்பு நிருபர் அப்பத்திரிகையில் அறிவிக்கிறார் இது எவ்வளவு தூரம் உண்மை என்பதை இப்போது சொல்லுதற்கில்லை. ஆனல் இது உண்மையாக இருக்கவேண்டுமென்பதே எமது பிரார்த்தனை. நெல்லிக்காய் மூடைபோன்ற சுயேச்சை வாதிகளின் கட்சியை மிஸ்டர் செனநாயக்கா இனியும் நம்பியிருக்கவொண்ணுது. ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழ்க் காங்கிரசிற்கு மிடையே ஓர் உறவு உண்டாகி அதன்பயனுக ஓர் கூட்டு மந்திரசபை ஏற்படவேண்டும். அப்போதுதான் ஸ்திரமான ஓர் அரசியல் ஏற்பட ஏதுவாகும். அப்படியான கூட்டுறவு ஏற்படும்பட்சத்தில், ஓர் சிலரின் ஆதரவைப் பெறுதற்காக அளவுக்கு மிஞ்சி விஸ்தரிக்கப்பட்ட மந்திரிசபையின் அங்கத்தவர்தொகையையும்குறைத்துவிடலாம்சின்னஞ்சிறு இலங்கையைப் பரிபாலிப்பதற்கு 14 மந்திரிகளும் 10 உப மந்திரிகளும், பரிவார உத்தியோகத்தர்களும் தேவையில்லை. ஆரம்ப காலத்தில் பட்டம் பதவிகளை வழங்கி ஆதரவுபெறுவதற்காக திரு செனநாயக்கா இந்தச் சூழ்ச்சியைக் கையாண்டார். தமிழ்மக்கள் ஆதரவு அவரது அரசாங்கத்துக்குப் பலமாக இருக்குமானல் சுயேச்சை வாதிகளின் உதவி அவர்க்கு வேண்டியதேயில்லை மந்திரிமார் தொகையை 7 ஆகக் குறைத்துவிடலாம்; உதவி மந்திரிகள் என்பது அவசியமற்ற உத்தியோகங்கள். அப்பதவிகளையும் நீக்கவேண்டும்.

## திருச்சி ரேடியோ

புதன் பிப்ரவரி 18

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 என் ஷண்முகரத்தினம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருவெண்காடுசுப்பிரமணியபிள்ளை நாகஸ்வரம் இசைத்தட்டு 8 30 குமாரி எஸ் கமலாபாய் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 எஸ் குமாரி கமலாபாய் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 எஸ் குமாரி கமலாபாய் பாட்டு 2 15 கல்விஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 கே வி ஜயராமய்யர் வயலின் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 நிகழ்ச்சிகள் 7 திருவாளர் திருவாளத்தான் 7 30 தமிழில் செய்திகள் 7 45 பேச்சு 8 என் ஷண்முகரத்தினம் பாட்டு 8 30 கே வி ஜயராமய்யர் வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 அப்துல்கனி 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

வியாழன் பிப்ரவரி 19

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 திருக்கருக்குடி வெங்கடராம ஐயங்கார் கோட்டுவாத்தியம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலைஇசை இசைத்தட்டு 8 30 சுவாமிமலை எஸ் ஜானகிராமன் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2 05 லாவிப் பாட்டுக்கள் 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 திருக்கருக்குடி வெங்கடராம ஐயங்கார் கோட்டுவாத்யம் 5 40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7 15 தென்னிந்தியத் தொழிலாளி 7 30 தமிழில் செய்திகள் 7 45 டி எஸ் ஷண்முகசுந்தரம்பிள்ளை பாட்டு 8 15 திருப்பாம்புரம் என் சுவாமிநாதபிள்ளை புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 டி எஸ் ஷண்முகசுந்தரம் பாட்டு 10 30 முடிவு.

வெள்ளி பிரப்ரவரி 20

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 வேடனூர் டி எஸ் மதுரம் சகோதரிகள் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருச்சி வாத்யகோஷ்டி 8 30 ஆர் மகாலிங்கம் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 வேடனூர் டி எஸ் மதுரம் சகோதரிகள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 ஆர் மகாலிங்கம் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 கீவளூர் டி எம் ஷண்முகசுந்தரம் பாட்டு 5 30 குரான் ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 கீவளூர் டி எஸ் ஷண்முகசுந்தரம் பாட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 திருவிழிமிழலை எஸ் சுப்பிரமணியபிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் 9 45 ராமநாடக கீர்த்தனைகள் 10 நீங்கள் கேட்டவை 10 30 முடிவு

## பெண்களின் உத்தியோக வேட்டை

### தமக்கும் சமத்துவம்வேண்டுமாம்

இலங்கையிற் புதிதாகத் தோன்றியுள்ள மாதர் ஐக்கிய சங்கம், அரசாங்க உத்தியோகங்கள் பெண்களுக்கும்வழங்க வேண்டுமென்று ஓர் இயக்கத்தை ஆரம்பிக்கப் போகிறது.

இலங்கையிலே கிளறிக்கல் உத்தியோகத்திலோ, சிவில் சேர்விஸ் உத்தியோகத்திலோ பெண்கள் அநுமதிக்கப்படுவதில்லை. இவ்வுத்தியோகங்களுக்கான பரீட்சைக்கு ஆடவர்களே தோற்றலாம். தக்க கல்விபெற்ற பெண்கள், ஆண்களுடன் சரிசமனுக ஏன் இந்தப் பரீட்சைக்குத் தோற்றக்கூடாது என்று மாதர் ஐக்கியசங்கம் கேட்டிருக்கிறது. இவ்விஷயத்தை உடனே அரசாங்கம் சிந்தித்து ஆகவேண்டியன செய்யவேண்டும் என்று மேற்படி சங்கம் அரசாங்கத்தைக் கேட்டிக்கிறது.

### யாழ்ப்பாணம் இந்துமகாசபை
## 4-வது வருடப் பூர்த்திவிழா

மேற்படி சபையின் நான்காவது வருடப் பூர்த்திவிழா நிகழும் 1948ம் வருடம் மாசி மாதம் 22 ந் திகதி (22-2 48)ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் மேற்படிசபை மண்டபத்தில் நடைபெறும்.


# நாதன்ஸ் பிரஸீரம்

மலேயாவுக்குச் சகல வசதிகளுமடங்கிய
பிரயாணக் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது

யாழ்ப்பாணம் - சென்னை - பினங் ரூபா 170
,, நாகபட்டணம் 115

யாழ்ப்பாணமிருந்து சென்னைவரை றெயில் இரண்டாம் வகுப்பு
அன்றேல் ஆகாயவிமானத்தில் உல்லாசப் பிரயாணம்
கப்பலில் டெக் உட்படக் கட்டணம் ரூபா 190

எஸ். ஆர். எஸ். நாதன்

21/3, ஸ்ரான்லி ரேட் :: யாழ்ப்பாணம்
எங்கள் கிளைஸ்தாபனங்கள்: சென்னபட்டணம், நாகபட்டணம்,
சிங்கப்பூர், கொழும்பு முதலியவிடங்களி லுண்டு

Std 22. 6-6-47—6-6-48



# இந்துசாதனம்

ஆங்கில - தமிழ்ப் பிரசுரங்கள்

பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். | வெளியூர். | மலாய்நாட்டுக்கு |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச |
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

அரியொடு கமலத்தேவும் ஆடல்செய் தகிலந்தன்னே
டோருவரை யொருவர் நுங்கி யுந்தியான் முகத்தானல்கி
யிருவரு மிகலுமேல்லே யெடுத்தபே ருருநீகோண்ட
திருவுரு விதனுக் காற்றச் சிறியன போலுமன்றே.

திருமாலும் பிரமதேவரும் போர்புரிந்து உலகத்தையும் ஒருவரையொருவரும் மாறிமாறி விழுங்கி உந்திக் கமலவாயிலாகவும் முகங்கள் வாயிலாகவும் மீள வெளியிட்டு அந்த இருவரும் சமர்செய்தபோது தனித்தனி கொண்ட பெரிய வடிவங்கள், தேவரீர் இப்பொழுது எங்கள் முன்னிலையிற் கொண்டுள்ள இந்தத் திருப்பெருவடிவத்தோடு ஒத்துப் பார்க்குமிடத்து மிகச் சிறியனவாகுமென்பது கருத்து.

திருமால் உந்தியாலும் பிரமா முகத்தாலும் நல்கினரென்க. இகலும் பெயரடியாகப் பிறந்த எச்சம்; பரமசிவன் அரிபிரமர் பொருட்டுக் கொண்டருளிய பரஞ்சோதிவடிவம் முருகவேள் அச்சமயத்திற் கொண்டருளிய திருப்பெருவடிவத்தை யொக்குமேயல்லாமல், அரிபிரமர் தமக்குள் மாறுபட்டகாலத்துக் கொண்ட பாரியவடிவங்கள் சிறிதுமொவ்வாவென்பார். 'இருவரு மிகலுமெல்லை யெடுத்த பேருரு நீ கொண்ட திருவுருவிதனுக்கு ஆற்றச் சிறியன" என்றாரென்க.

அரிபிரமர் ஒருவரோடொருவர் மாறுபட்டு அகிலமுண்டுமிழ்ந்த வரலாற்றைத் ததீசியுத்தரப்படலத்திற் காண்க. (98)

ஆசையா லெம்பிரானி யாருவுருவாகி நின்ற
ஏகநா யகனேயாகும் எமதுமா தவத்தா லெங்கள்
சோகமா னவற்றை நீக்கிச சூர்முதல் தடிந்தேயெம்மை
நாகமே லிருத்து மாற்று னண்ணிணை குமரனேபோல்.

மேலே காட்டப்பட்ட காரணங்களினால், எங்கள் பெருமானே! தேவரீர் அருவமு முருவமுமாகி விளங்கும் முழுமுதற் கடவுளாகிய பரமசிவனே யாகின்றீர்; எங்கள் பெரியதவக் காரணமாக எங்கட்கு நேர்ந்த துன்பங்களை நீக்கியருளி அசுரர் தலைவனாகிய சூரபன்மனை வதைத்து எங்களைப் பழையபடி சுவர்க்கலோகத்திற் குடியேறறத் திருவுளங்கொண்டு குமாரத் தெய்வமாக இங்கே யெழுந்தருளினீர் என்பது கருத்து.

பரமசிவனுக்கும் அறுமுகக்கடவுளுக்கும் பேதமில்லையாதலின் "ஏக நாயகனேயாகும" "நண்ணினை குமரனேபோல்" எனக் கூறினர். சோகமானவை-சூரபன்மன் முதலிய அசுரர்களால் நேருந் துன்பங்கள். நீ ஆகும்-இடவழுவமைதி. (99)

எவ்வுரு வினுக்கு மாங்கோர் இடனா யுற்றவுன்றன்
செவ்வுரு வதனைக் கண்டு சிறந்தனம் அறம்பா வத்தின்
அவ்வுருவத்தின் றுப்பு மகலுதும் இன்னும் யாங்கள்
வெவ்வுரு வத்திற் செல்லேம் வீடுபே றடைதுமன்றே.

எல்லாவகையான தோற்றங்களையுங் கொள்ளுதற்கு இடமாக விளங்கும் தேவரீருடைய சிறந்த திருப்பெருவடிவத்தைத் தரிசித்து உய்தியடைந்தேம்; (மேலும் இதனால்) புண்ணிய பாவங்களின் தொகுதியாகிய அந்த வடிவத்தின் அனுபவமும் நீங்கப்பெறுவேம், அன்றியும் துன்பத்தைத் தருகின்ற பிறவியையும் இனிமேல் எடுக்கமாட்டேம், மோக்ஷமாகிய பேற்றினை யடைவேம் என்பது கருத்து.

சகல அண்டங்களும் அவ்வண்டங்கள்தோறுமுள்ள சராசரங்களும் பெருமான் கொண்டருளிய திருப்பெருவடிவத்தில் அமைந்துள்ளனவாதலின் "எவ்வுருவினுக்கு மாங்கோரிடனதாயுற்ற வுன்றன், செவ்வுருவதனை" என்றார்; சிறந்தனம் - பரிசுத்தரானேம். காலந்தோறுஞ் செய்த புண்ணிய பாவங்களின் தொகுதியென்பார், "அறம்பாவத்தின் அவ்வுரு" என்றார்; துப்பு-அநுபவம்; நல்வினை தீவினை யிரண்டும் முறையே பொன்விலங்கும் இருப்புவிலங்கும்போல் முத்தியடைதற்கு இடையூறாக நின்று பிறவியைப் பெருக்குமாதலின், தேவரீர் கொண்ட திருப்பெருவடிவத் தரிசன மகத்துவத்தால் அத்தடை நீங்கி வீடுபேற்றையடைவே மென்பார். 'உன்றன் செவ்வுருவதனைக்கண்டு.... அறம்பாவத்தின் அவ்வுருவத்தின் றுப்புமகலுதும்" எனவும் "யாங்கள் வெவ்வுருவத்திற் செல்லேம வீடுபேறடைதும" எனவுந் தேவர்கள் கந்தவேளைப் போற்றி வந்தனை செய்தவாறும். (100)

### காந்தியடிகள் ஞாபகார்த்த விழா

மேற்படி விழா 12-2-48 தென்மயிலைச் சன்மார்க்கசபை மண்டபத்தில் சபைத் தலைவர் திரு. நா. பொன்னையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. காந்தியடிகளின் உருவப்படம் ஊர்வலமாக மண்டபத்தை அடைந்தபின் பிரார்த்தனை நடைபெற்றது. வழக்கறிஞர் திரு. பொ. நாகலிங்கம் அவர்கள் காந்தியடிகளின் ஹரிஜனத்தொண்டின் உயர்வு பற்றியும் அதை எதிர்காலத்தில் நடத்தும் முறையைப்பற்றியும் சொற்பொழிவாற்றினர். திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் தியாகசேவைபற்றியும் நூல் நூற்றலில் பயிற்சியடைந்து அதனை நடாத்த வேண்டிய அவசியம் பற்றியும் சொற்பொழிவாற்றினர். பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ஆபிரகாம்லிங்கன், சோக்றற்றீஸ் முதலிய மேலைத்தேசத் தொண்டர்கள் கதியைப்பற்றிக்கூறி இந்திய இதிகாசம் இதற்கு மாறானதெனவும் அது தருமன் பொறை கன்னன் கொடை, இராமன் வனவாசம் முதலிய கதைகள் மூலம் அறியற்பாலதெனவும், பிரிட்டிஷ் ஆட்சியின்மூலம் மேலைத்தேச இயல்பு இந்தியாவில தலைகாட்டியமையே காந்திஜியின்முடிவுக்குக் காரணமாயது எனவும் விளக்கி அறிஞர் பெர்னட்சோ "நல்லவர்களுக்குக் காலமில்லை" எனக் கூறிய அறிக்கை இந்திய தொன்மைக்கு மாறானதெனக் கூறினர். பின் தலைவர் குறிப்புரையுடனும் நன்றியுரையுடனும்கூட்டம் இனிது நிறைவேறிற்று.

### இடி முழங்குகிறது

2 ம்பக்கத் தொடர்ச்சி

கூட்டத்தில் 35,000 பேர்வரை சமுகமளித்திருந்தாலது பிரதமர் சேனநாயக்கா, காற்று எத்திசையிலடிக்கிறது என்பதை உணர வேண்டும். "தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்" என்ற பாரதியின் முழக்கம் கேட்கிறது. அந்த இடிமுழக்கத்தில் அகப்படும் அரவம்போலத் திரு. சேனநாயக்கா இருக்கப்போகிறாரா? அல்லது அந்த முழக்கம் இந்த இலங்கையில் தாக்குமுன் ஆவனவற்றைச் செய்து சாதாரண மனிதனின் வாழ்க்கையை உயர்த்தப்போகிறாரா?

### அடிகளைக் கொன்ற பாதகன்

மகாத்மாகாந்தியடிகளின் ஆருயிரைப் போக்கடித்த பாவி நாதுராம் கோட்ஸே சென்றவாரம் பம்பாய்க்கு இட்டுச் செல்லப்பட்டான்.

### தேகவியோகம்

#### திருஞானசப்பந்தச் சோதிடர்

நாயன்மார்கட்டிற் பிரபல சோதிடராயிருந்தவரும் அவ்வூர் மகேசுவரி வித்தியாசாலைத் தாபகர்களுள் ஒருவருமாகிய ஸ்ரீ க. திருஞானசம்பந்த சோதிடரவர்கள் 12-2-48) சென்ற வியாழக்கிழமை பகல் $10\frac{1}{2}$ மணியளவில் தம்மைப் பீடித்துவருத்திய நோய் காரணமாக தமது திருகத்திற்றூனே தேகவியோகமானர். இவர் நல்லூர்க் கந்தசுவாமிகோவிலுக்குத் தினமும் சென்று வழிபட்டுவந்தவர்; சுப்பிரமணிய உபாசனை, சாந்தகுணம், ஈகை முதலிய சிறந்த குணங்கள் வாய்ந்தவர்; எவரோடும் தண்ணளியாக ஊடாடும் திறமைபடைத்தவர்; இலங்கையில் எல்லாப் பகுதிகளி லுள்ளாராலும் நன்கறியப்பட்டவர். யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டக்டர் C குகநாததாசன் அவர்களின் மனைவி தில்லையம்மாளும், சிதம்பரம் அண்ணாமலைச் சர்வகலாசாலையில் வித்துவான வகுப்பிற் கல்வி பயிலும் மகேஸ்வரியும் இவரது புத்திரிகளாவர்; இவர் இறக்கும்போது வயசு 67 இவரது ஆன்மா சாந்தியடைக.

#### சேர்த்துக்கொள்க

இற்றைப் பிரசுரத்தின் 6 ம் பக்கத்தில் உள்ள தேகவியோகச் செய்தியில், குமாரி சிவனேசுவரி இறக்கும்போது வயது 20 எனச் சேர்த்துக்கொள்க.

### திருச்சி ரேடியோவில் யாழ்ப்பாண வித்துவான்கள்

திருச்சி ரேடியோவில் நாளைத்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் சங்கீத வித்துவான் திரு. என். ஷண்முகரத்தினம் காலை $7\frac{1}{2}$ மணிக்கும் இரவு 8 மணிக்கும் சங்கீதக் கச்சேரி செய்வார்.

23-2-48 திங்கட்கிழமை காலை $7\frac{1}{2}$ மணிக்கும், மாலை 5 மணிக்கும் யாழ்ப்பாணம் பிரபல நாதஸ்வர வித்துவான் திரு. எஸ். எஸ். அப்புலிங்கம்பிள்ளை நாத வரக்கச்சேரி செய்வார்.

### 10,000 ரூபா செலவு

சென்ற சனிக்கிழமை யிரவு கொழும்பில் சுதந்திரவிழாவை ஒட்டி நிகழ்ந்த வாணவேடிக்கையின் பொருட்டு 10,000 ரூபா அரசாங்கத்துக்குச் செலவாகியிருக்கிறது.

### நல்ல சகுனம்தான்; ஆனால்............

சென்ற 5-ந்திகதி அநுராதபுரக் காட்டிலே தந்தமுள்ள ஓர் யானைக் கன்றைக் கிராமவாசிகள் பிடித்தார்கள்; இலங்கையின் சுயராச்சிய அங்குரார்ப்பணத்தைத் தொடர்ந்து இந்த யானை பிடிக்கப்பட்டபடியால், நல்ல சகுனம் என்று சிங்களப் பத்திரிகைகள் கூறின; அந்த யானைக் கன்றுக்கு "ராஜா" என்று பெயரும் வைத்தார்கள்

குளோஸ்டர் கோமகன் அநுராதபுரத்திற்கு விஜயம் செய்தபோது, இந்த யானைக்கன்றையையும் கொண்டாட்ட ஊர்வலத்தில் விடுவது என்று தீர்மானிக்கப்பட்டது; அதன்படி அதனை அலங்கரித்து ஊர்வலத்துக்குத்

### நாளைத்தினம

#### அடிகளின் அஸ்தி இலங்கைக்கு வரும்

மகாத்மாகாந்தியடிகளின் புனித அஸ்தியின் ஓர்பாகம் இலங்கைக்கு நாளைத்தினப் (புதன்கிழமை) ஆகாய விமான மூலமாகக் கொண்டுவரப்படும். அந்த அஸ்தியை உபசரித்து ஏற்று, ஆகவேண்டிய கருமங்களைச் செய்ய கொழும்பு மேயர் ஓர் கூட்டத்தை இன்று கூட்டுகிறார்

ஆயத்தஞ் செய்கையில், வலி நோய்கண்டு வீழ்ந்து மாண்டுவிட்டது

### யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையார்

## வெளியிட்ட பாலபாடங்கள்

| | | ரூ. ச. |
|---|---|---|
| சிறுபிள்ளைப்பாடம் | (சித்திரசகிதமானது) | — 35 |
| முதற் பாலபாடம் | ,, | — 35 |
| இரண்டாம் பாலபாடம் | ,, | — 50 |
| மூன்றும் பாலபாடம் | ,, | — 60 |
| நான்காம் ,, | ,, | — 80 |
| (A) இலக்கியவாசகம் மூன்றும் புத்தகம் | | — 60 |

[நான்காந்தரத்துப் பிள்ளைகட்கு உபபாடமாகவுள்ளது; புதுக்கிய இரண்டாம் பதிப்பு: அரிச்சந்திரமகாராசனுடைய வரலாறு: செய்யுட்பாகம்; பஞ்சதந்திரத்தில் காக்கை ஒட்டகத்தை வஞ்சித்த கதை, நீதிக்கவித்திரட்டு (சித்திரமில்லை)

| | | |
|---|---|---|
| ஐந்தாம் பாலபாடம் | ,, | — 80 |

[இரண்டாம் பாலபாடந் தொடக்கம் ஐந்தாம் பாலபாடம் வரையுள்ள நான்கு பாலபாடங்களிலும் முன்னருள்ள பாடங்கள், அரும்பதவிளக்கம் செய்யுட்பாடவுரை என்னு மிவைகளுடன், ஒவ்வொரு பாடங்களின் இறுதியிலும் வினக்கள் இலக்கணக்குறிப்பு அப்பியாசம் என்னுமிவைகளும் புதியனவாய் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன.]

| | | |
|---|---|---|
| ஆறும் பாலபாடம் (புதுக்கியபதிப்பு) | | — 90 |
| ஏழாம் ,, | ,, | — 90 |
| எட்டாம் ,, | ,, | 1 00 |

[இப் பாலபாடங்கள் பத்தும் இலங்கை வித்தியாதிகாரியின் அங்கீகாரம் பெற்றுள்ளன; வித்தியாபகுதியாரின் நிபந்தனைகட்கமையத் தொகுக்கப்பெற்றன. தனித்தனி பல பதிப்புக்களை யடைந்துள்ளன. உயர்ந்த கிளேஸ் காகிதத்திற் பெரிய அச்சாங்களில் தெளிவுற அச்சிட்டு அழகுறக் கட்டப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலுமுள்ள சைவ வித்தியாசாலைகளிலும் அரசினர்பாடசாலைகளிலும் உவந்தேற்று உபயோகிக்கப்படுவன எல்லா வகுப்பிலும் சபையார் பாலபாடத்தை உபயோகிக்கும் வித்தியாசாலைகட்கு இந்துசாதனப்பத்திரிகை, பாதிக்கிரயம் மாத்திரம் பெற்றுக்கொண்டு கிரமமாக அனுப்பப்படுகின்றது ]

மனேஜர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிந்து சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)



# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை

கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4—48



# கந்தசாமி வைத்தியர்
## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் சூடற் புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால் றாத்தல் விலை ரூபா 5-00**

வி. பீ. பி. யில் அனுப்புவோம்.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்

— வல்வெட்டித்துறை —

Std 45 1-7-47—30-6-48 (செ)


# மாசிமகம்

*

மாசிமகம் சைவர்களாலும் வைணவர்களாலும் புனிதநாளாகக் கொள்ளப்படுவது. அத்தினம் அநேகமாக மாசிமாத பௌர்ணிமை திதியில் வரும். அன்று கடற்கரையைச் சார்ந்த தலங்களிலெல்லாம் கோயில்களிலுள்ள மூர்த்தங்களைக் கடற்கரைக்கு எழுந்தருளச் செய்து தீர்த்தோற்சவம் கொண்டாடுதல் தொன்று தொட்டு நடந்தேறும் வழக்கம். இவ்வுற்சவத்தைக் "கடலாட்டு" என்று சம்பந்தப் பெருமான் தமது தேவாரத்தில் கூறுகின்றார். "மாசிக் கடலாட்டுக் கண்டான் கபாலீச்சரமமர்ந்தான்" என்பது அப்பாசுரம்.

மாசிமகம் கும்பகோணத்தில் (அது கடற்கரையைச் சாராததாயிருந்தும் மிக விசேஷமாகக் கொள்ளப்படுகின்றது. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் மகாமக புண்ணிய காலம் அத்தலத்திற்கே உரியதாகும். மகாமககுளம் என்னும் அத்தலத்திலுள்ள தீர்த்தம் சாலச்சிறந்தது. அத்தீர்த்தத்தில் எல்லா நதிகளும் வந்து சேர்ந்து அப்புண்ணிய தினத்தைப் புனிதப்படுத்துவதாகப் புராணம் கூறும். மகத் தீர்த்தாடனத்திற்குரிய ஏனைய தலங்களாவன:- சேது எனப்படும் இராமேசுரம், வேதாரணியம், மகாபலிபுரம். திருச்செந்தூர், கன்னியாகுமரி, திருக்குற்றாலம், விருத்தாசலம் முதலியன.

இப்புண்ணிய நாள் இவ்வாண்டில் 24-2-48செவ்வாய்க்கிழமைநிகழுமதனால்யாமெமக்குச்சமீபத்திலுள்ள கடலிலோ அல்லது நதியிலோ அல்லது கோயிற் குளத்திலோ ஸ்நானஞ் செய்து இறைவனை வழுத்துவோமாக, சிவபிரானுடைய திருநாமங்களுள் தீர்த்தன் என்பது ஒன்றாகும்.

'தீர்த்தனே நின்றன் திருவடி
யடைந்தேன்
செழும்பொழிற் றிருப்புன்
கூருளானே"

என்பது சுந்தரர் தேவாரம்.

திரு. சே. வெ ஜம்புலிங்கம்பிள்ளை

# தேகவியோகம்

குமாரி சிவனேசுவரி

கோலாலம்பூரில் அரசினர் கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர் திரு த. சிவப்பிரகாசத்தின் இரண்டாவது புதல்வி குமாரி சிவனேசுவரியம்மாள் தம்மைப் பீடித்த வாதசுரம் காரணமாக இம்மாதம் 11 ம் திகதி கோலாலம்பூரில் தமது பெற்றோரில்லத்தில் சிவபதமடைந்தனர். அவருக்கு இறக்கும்போது வயது. அவர் பெண்களுக்கு அணிகலமென மதிக்கப்படும் நல்ல கல்வியைப் பயின்று சுகுணங்களோடு அமையப்பெற்றவர். அவர் மலாய் தேச பென்ஷனர் வட்டுக்கோட்டை ஸ்ரீ க. ஆறுமுகம் அவர்கட்கும்சிராவியடிபிறக்ரர் ஸ்ரீ க. ஐயாத்துரை அவர்கட்கும் மருகியாவர். அவர் பிரிவை ஆற்றாது துயருறும் பெற்றோருக்கும் உற்றார் உறவினருக்கும் எங்கள் அநுதாபம் உரியதாகுக.

—கடித

# புடைவைக்கட்டுப்பாடொழியும்

இந்த வருஷம் முடிவதற்கிடையில் புடைவைக்கட்டுப்பாட்டை ஒழித்துவிடலாம் என்று, புடைவைக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. எம். எப். டீ எஸ் ஜெயரத்தின வர்த்தக மந்திரி திரு. சுந்தாலிங்கத்துக்கு ஓர் அறிக்கைசமர்ப்பித்திருக்கிறாரென்றுஓர் செய்தி கூறுகிறது. இவ்விஷயமாகஓர் அறிக்கையைத்தரும்படி திருசுந்தரலிங்கம் மேற்படி அதிகாரிக்கு இம்மாத முதற்பகுதியிற் கட்டளையிட்டது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

# அதிக அரிசி

சிங்கப்பூரில் நடைபெற்ற சர்வதேச உணவுச் சபையில் பங்குபற்றித் திரும்பியுள்ள, இலங்கை உணவுப்பகுதி யதிகாரி, இந்நாட்டு மக்களுக்கு உற்சாகம் விளைக்கக்கூடிய செய்தி ஒன்று விடுத்திருக்கிறார். அதாவது, இந்த வருஷம் மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கு டி சபையால் மாதம் ஒன்றுக்கு 43 000 தொன் அரிசி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இலங்கைக்கு அரிசி கொண்டுவர ஏற்கெனவே இரு கப்பல்கள் ஒழுங்குசெய்யப்பட்டிருக்கின்றன வென்றும் இன்னும் 72,500 தொன் அரிசி கொண்டுவர ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும் திரு. ஆழ்வாப்பிள்ளை தெரிவிக்கின்றார்.


# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

**இலஙகை அரசாங்கத்தின் வங்கிக்காரர்**

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிலேஸ வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை
யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை குருணாக்கல், வதுளை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள்கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

Std. 7-8, 29 1-8—30-4


## வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna. on Tuesday. February 17. 1948

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org